International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 05 Issue: 02 April to June 2023 www.irjtsjournal.org

# சங்க இலக்கியத்தில் வேளாண் நிலங்கள்

முனைவர்.க.சி.குமரன்
பேராசிரியர்தமிழ்
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடுவேளாண்மைப்பல்கலைக்கழகம்
பெரியகுளம் – தேனி - 625604

பூமியின் நிலப்பரப்பிலேயே தாவரங்கள் உயிர்வாழ்வதற்கு ஏற்றதாக இருக்கும் தாது, கரிமம் ஆகிய பொருள்களின் கலவை மண் எனப்படும். வேளாண்மைக்கு அடிப்படையாக விளங்கும் மண், உலகின் வெவ்வேறு பகுதிகளில் பல வகைகளில் காணப்படுகிறது. உலகின் மண்வகைகளை ஒன்பது வகைகளாகப் பிரிப்பர் மண்ணியலார்.

1. துந்திரப் பிரதேச மண் வகை**(Thuddra Soil)**
2. ஊசியிலைக் காடுகளில் காணப்படும் மண் வகை**(Pod Soil)**
3. இலையுதிர் காடுகளில் காணப்படும் மண்வகை**(Brown earth)**
4. கருமண்**(Black Soil)**
5. மிதவெப்ப மண்டலத்தில் காணப்படும் மண்வகை**(Chestnut coloured Soil)**
6. செம்பொறை மண்**(Laterite Soil)**
7. மலைப்பகுதிகளில் காணப்படும் மண்**(Peaty Soil)**
8. உவர் மண் **(Saline Soil)**
9. களர் மண்**(Alkaline Soil)**

மண்ணின் தன்மைக்கும் வளத்திற்கும் ஏற்பத் தமிழ்நாட்டு மண் வகைகளை ஐந்து பிரிவுகளாகப் பிரிப்பர் அறிவியலார்.

1. செம்மண்**(Red Soil)**
2. கருமண்**(Black Soil)**
3. வண்டல் மண்**(Alluvial Soil)**
4. செம்பொறை மண்**(Laterite Soil)**
5. களர் – உவர் மண்**(Saline – Alkali Soil)**

பண்டைத் தமிழர்கள் மண் என்பதை நிலம் என்ற பொருளில் நிலத்தை நானிலமாகப் பகுத்து வகைப்படுத்தியுள்ளனர்.வேளாண்மைக்கு அடித்தளமாய் அமைவது நிலமும் நீரும். அந்நிலம் மண் அணுக்கள் செறிந்திருப்பது. நிலம், நீர் இவற்றின் இயைபே உணவுப் பொருள்களின் ஆக்கமாகும். இவ்வடிப்படையை உணர்ந்த பண்டைத் தமிழ் மக்கள் வாழ்க்கைக்கு அடிப்படையாகவும், உறுதுணையாகவும் இருப்பதை முதற்பொருள் என்றனர்.

தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் பண்பாடும் அமையும் என்பது பண்டைய தமிழரின் சிறந்ததொரு கொள்கையாகும். அத்துடன் காலம் என்ற தத்துவமும் மக்கள் வாழ்க்கையில் பேரிடங் கொண்டது. ஆகவே மக்கள் வாழ்ந்த இடமும் காலமும் அவர்களுக்குத்


© 2023, IRJTSR

தேவையான முதற்பொருள் எனக் கொள்ளப்பட்டன. முதற்பொருளாகிய நிலம் பொழுது இரண்டனுள், நிலத்தினை இயற்கை அமைப்பிற்கு ஏற்ப நான்கு வகைகளாகப் பகுத்தனர். குறிப்பாக அவ்வந்நிலத்தில் தோன்றும் மரம், செடி கொடிகளைக் கொண்டே அவ்வந் நிலங்களுக்குப் பெயரும் வழங்கினர்.

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்றும் மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும் வயலும் வயல் சார்ந்த மருதம் என்றும் வழங்கப் பெற்றது. பாலை என்பதோர் நிலப்பிரிவு உண்டு எனினும், அதற்குத் தனிநிலம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. 'நானில அமைப்பே இயற்கை அமைப்பு, பாலை காதலின் ஒழுக்க வகை பற்றியது'1

### குறிஞ்சி நிலம்(Mountainous Region)

மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி. அந்நிலத்து மண், குன்றைச் சூழ்ந்த சிறு சிறு கற்களும் மண்ணும் கலந்த பகுதியாகும்.2 குறிஞ்சி நிலத்திற்குப் பாரியின் பறம்புமலை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அம்மலைக்கண் உழவர் உழாமலே மூங்கில் செல்லும் பலாவும் வள்ளிக்கிழங்கும் தேனும் விளையும் என்பதால் குறிஞ்சியின் இயற்கை நலத்தையும் மண் வளத்தையும் விளைபொருளையும் நன்கு அறியலாம்3.

குறிஞ்சி நில மக்களின் உணவுப் பொருள் தினையும் ஐவனமும் வெதிர்நெல்லும்4 ஆகும். குறிஞ்சி நில மக்கள் தினை விளைத்தலையும் கிழங்கு அகழ்தலையும் தேன் அழித்தலையும் வேட்டையாடுதலையும் தொழிலாகக் கொண்டிருந்தனர்.

**மரபுப் பெயர்கள்**

குறிஞ்சி நிலப் பகுதிகளில், விளை நிலங்களைப் **புனம்** என்றும் **முதை** என்றும் **துடவை** என்றும் வழங்குவர்.

புனம் : புனம் என்பதை 'மலைச் சார்பான கொல்லை'5 என்பர்

**இதை :** குறிஞ்சி நிலத்தில் மரங்களை அழித்துப் புதிய விளைநிலம் தயாரிப்பர். அப்புதிய புனத்தை 'இதை' என்று வழங்குவர்6.

**முதை :** குறிஞ்சியில் பழமையான நிலத்தை 'முதை' என்று வழங்குவர்7.

**துடவை :** குறிஞ்சி நிலத்துப் புன்செய் நிலத்தைத் 'துடவை' என்று குறிப்பர். துடவையில் சிறுதினை விளையும்8.

இம்மரபுப் பெயர்களால் பண்டைத் தமிழ் மக்களின் வேளாண்மை அறிவின் தொன்மையும் நுட்பமும் தெளிவும் புலனாகும்.

### முல்லை நிலம் (Pastoral region)

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலமாகும். முல்லை நிலம், செம்மண் பரப்பை உடைய பகுதி9, ஊனைக் கிழித்தது போன்ற செந்நிறம் அமைந்த மண் உவமையும் கருதத்தக்கது10. முல்லைநிலச் செந்நிலப் பகுதியில் கார் காலத்தில் விதைத்த சிறுதினை கொய்யும் நிலையை அடையவும், எள்முற்றி

விளையவும் கரிய தாள்களை உடைய வரகு முதிரவும் பொலிவுற்று இருந்தது11 என்பதால் முல்லை நிலத்தின் இயல்பையும் விளையும் பயிர்களையும் அறிய முடிகின்றது.

நில வளமும் குறைந்த பகுதியாதலின் புன்செய்ப்பயிர்களே விளைந்தன. வரகு, தினை, எள், அவரை ஆகியன முல்லைநில மக்களின் உணவுப் பொருளாகும். முல்லை நில மக்கள் வரகு, தினை ஆகியவற்றை விளைவிப்பதையும் ஆடுமாடுகளை வளர்ப்பதையும் பால்படு பொருள்களை விற்பதையும் தொழிலாகக் கொண்டிருந்தனர்12.

**மரபுப் பெயர்கள்**

முல்லை நிலத்தைப் புறவு என்றும் கொல்லை என்றும் கானம் என்றும் வழங்குவர்.

**புறவு** : முல்லை நிலச் சிறுகாடுகளைப் புறவு என்று வழ்ங்குவர்13.

**கொல்லை** : பயிரின்றித் தரிசாய்க் கிடந்த பகுதியைக் கொல்லை என்பர்14.

**கானம்** : மரங்கள் நிறைந்த முல்லைப் பகுதி கானம் எனப்பட்டது15.

கானம் என்ற சொல்லும் காடு என்ற சொல்லும் பெருவழக்காய் பயிலப்பட்டுள்ளது. எனினும் ஓரிடத்தில்கூட மருத நிலத்தையோ நெய்தல் நிலத்தையோ காடு என்ற சொல்லால் குறிக்கப்பெறவில்லை என்பதும் கருதத்தக்கது.

## மருத நிலம் (Agricultural region)

வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலமாகும். 'தீம்புனல் உலகம்' என்று போற்றப்படும் மருதம், வற்றாத நீர் வளஞ்சான்ற பகுதியாகும். 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி' பாயும் நிலவளஞ் சான்ற கழனிகள் மருத நிலத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். கரும்பும் செந்நெல்லும் தென்னையும் வாழையும் கமுகும் மாவும் பனையும் இஞ்சியும் மஞ்சளும் விளைவு அறாமல் விளைந்தன16.

மருத நிலமக்களின் முதன்மையான உணவு செந்நெல்லும் வெண்ணெல்லும் ஆகும்17. இம்மக்களுக்கு நெல் விளைவிப்பதே முதன்மையான தொழிலாகும்.

**மரபுப் பெயர்கள்**

மருதநிலப் பகுதிகளைக் கழனி என்றும் பழனம் என்றும் செறு என்றும் வழங்குவர்.

**கழனி :** சேற்று வயலைக் குறிக்கும் இது நடவுக்கு முன் உள்ள நிலை18.

**பழனம் :** நெல்வயலைக் குறிக்கும். இது நடவுக்குப் பின் உள்ள நிலை19.

**வயல் :** மருதநில விளை நிலங்களை வயல் என்று குறித்தனர்20.

**செறு :** நீர் நிறைந்த சேற்றுவயல் செறு எனப்பட்டது21.

## நெய்தல் நிலம் (Maritime region)

கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும். நெய்தல் கடலோரப் பகுதியாதலின் மணல் கலந்த மண்வாகுடைய நிலப் பகுதியாகும். 'பிசிர்' சிதறும் அலைகள் மோதிக் குவிந்த மணல் மேடுகள் நிறைந்த பகுதி நெய்தல் நிலம்22. இந்நிலத்தில் மழை பெய்தால் நெல் விளையும், மழை பெய்யாவிடின் உப்பு விளையும்23. இம்மக்கள், மீனும் உப்பும் கொடுத்து நெல், பயறு முதலியவற்றைப் பண்டமாற்றாகப்

பெற்றனர். அவ்வாறு பெற்ற பொருள்களும் உணவாயின. நெய்தல் நில மக்கள் உப்பு விளைவிப்பதையும் மீன் பிடிப்பதையும் முதன்மையான தொழிலாகக் கொண்டிருந்தனர்24.

**மரபுப் பெயர்கள்**

நெய்தல் நிலப் பகுதிகளை அடைகரை, எக்கர், பரப்பு, கழி, கானல் என்ற பெயர்களால் வழங்குவர்.

**அடைகரை :** அலை மோதுகின்ற இளமணல் உள்ள கடற்கரைப் பகுதி அடைகரை எனப்பட்டது25.

**எக்கர் :** கரை நெடுகிலும் குன்றெனத் திரண்டு நிற்கும் மணல் குவியல்கள் எக்கர் என வழங்கப்பட்டன26.

**பரப்பு :** தாழை புலால் நாற்றத்தை அகற்றுகின்ற கடற்கரையின் பரந்த இடம் பரப்பு எனப்பட்டது27.

**கழி :** கடற்கரையை அடுத்த உப்புநீர்ப் பகுதி கழியாகும். பாண்டிய நாட்டுக் கடற்கரைக் கழியில் வெள்ளிய உப்பு விளைவிக்கப்பட்டது28.

**கானல் :** நெய்தலும் புன்னையும் தாழையும் மலர்ந்து மணங் கமழும் கடற்கரைச் சோலை கானல் எனப்பட்டது29.

**வன்புலம்**

மண்வளமும் நீர்வளமும் குறைந்த பகுதியை வன்புலம் அல்லது வன்பால் என்பர்30. குறிஞ்சியும் முல்லையும் வன்புலம் என்ற பிரிவில் அடங்கும்.

**மென்புலம்**

மண்வளமும் நீர்வளமும் நிறைந்த பகுதியை மென்புலம் அல்லது மென்பால் என்பர்31.

**புன்புலம்**

தினை, வரகு முதலிய புன்செய்ப் பயிர் விளையும் நிலங்களையும்32 விதைத்துவிட்டு வான்நோக்கும் வறட்சியான நிலங்களையும்33 புன்புலம் என்று வழங்கினர்.புன்புலம் என்று முல்லை நிலத்தையே சங்க நூல்கள் குறிக்கப்படுகின்றன.

**படப்பை**

படப்பை என்ற சொல் பக்கம் என்ற பொருளிலும் மலைத் தோட்டம் என்ற பொருளிலும் பயன்படுத்தப்பெற்றுள்ளது. 'படப்பை' என்பது மனைப்புறத் தோட்டம். ஆனிரைகளுக்குரிய உணவுப் பொருளைத் தொகுத்து வைத்திருப்பதற்கும் தம் உணவுவுக்கு வேண்டிய காய்கறிகளைப் படைத்துக் கொள்வதற்கும் மனைப்புறத்தே அமைந்துள்ள தோட்டக்கால் படப்பை எனப்படும்34.

**விடுநிலம்**

கால்நடைகளின் மேய்ச்சலுக்கென ஊரவரால் பொதுவாக விடப்பட்ட நிலம் விடுநிலம் எனப்பட்டது35. வேளாண்மைக்குப் பயன்படாத கரம்பை நிலத்தையே பெரும்பான்மையும் மேய்ச்சலுக்கு விடுவர். இதனை 'விளைவின்றி விடப்பட்ட நிலம்' என்பார் பழைய உரைகாரர்36.

**பயன்படா நிலங்கள்**

விளைச்சலுக்கு ஏற்ற நிலங்களைப் பகுத்தறிந்து பெயரிட்டது போலவே, பயன்படா நிலப் பகுதிகளையும் பிரித்தறிந்து பெயரிட்டுள்ளனர் பழந்தமிழர். சங்க இலக்கியத்தில் இவ்வரையறை தெளிவாகப் புலப்படுகிறது.

**முரம்பு**

முல்லை நிலத்தில் காணப்படும் மண்வகைகளில் முரம்பும் ஒன்று. இதனைப் பால் கற்கள் நிறைந்த முரம்பு37 நிலம் என்றும் குறிப்பிடுவர்.

**கரம்பை**

நீர் இன்றி வேளாண்மைக்குப் பயன்படாது விடப்பட்ட நிலம் கரம்பை எனப்பட்டது38.

**உவர் நிலம்**

உப்புத்தன்மை உள்ள நிலம் உவர் நிலமாகும். அவ்வுப்புத் தன்மை39 மிகுதியானால் அது களர் நிலம் எனப்படும். தயிர் கடையும்போது திரளாது சிதறிக் கிடக்கும் வெண்ணெய்போல் உப்புப் பூத்த களர்40என்றும் வெண்ணிறத்தோடு கூடிய ஆட்டுத்தோலை விரித்துப் பரப்பியது போன்ற நீண்ட வெண்மையான களர்41 என்றும் களர் நிலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**களர் நிலம்**

கரிய நிறமிடையதைக் கருங்களர் என்பர். கருங்களரில் உயர்ந்து வளர்ந்த கவையாகிய முல்லையுடைய கள்ளி மரங்களும்42 கரிய கனிகளை நல்கும் ஈத்த(ஈச்ச)மரங்களும்43 புளியமரங்களும்44 வளரும் என்ற குறிப்பும் காணப்படுகிறது. களர் நிலத்திலும் என்னென்ன விளையும் என்ற உண்மையைக் கண்டறிந்து பயிரிட்டுள்ளமையை இதனால் அறிய முடிகிறது. இதனை நிலத்தின் திறனுக்கு ஏற்ற பயிர் (Crop Suitability) என்பர்

**முடிவுரை**

பண்டைத் தமிழர்கள் நிலத்தை நானிலமாகப் பகுத்ததும் பெயரிட்டதும் இயற்கையை உணர்ந்தே செய்யப்பட்டது என்பதும் அஃது இன்றைய அறிவியலின் ஐவகைப் பிரிவிற்கும் இயைந்துள்ளது என்ற உண்மையும் தெளிவாக்கப்பட்டுள்ளது. நானிலங்களிலும் விளைநிலங்களை தமிழ்மக்கள் குறிப்பிடும் மரபுப் பெயர்கள் கொண்டு அவர்தம் பயிர்த்தொழில் தொன்மையும் உணர்த்தப்பட்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. *மாணிக்கம், டாக்டர் வ சுப., தமிழ்க்காதல், பாரிநிலையம், சென்னை, 1975, பக். 193.*
2. *‘குண்றுதலை மணந்த புன்புல வைப்பும்’ – பதிற். - 30-13*
3. *உழவ ருழாதன நான்குபய நுடைத்தே*
   *ஒன்றே, சிறியிலை வெதிரி நெல்விளை யும்மே*
   *இரண்டே, தீஞ்சுழைப் பலவின் பழமூழ்க் கும்மே*
   *மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே*
   *நான்கே, அணிநிறஓரி பாய்தலின் மீதழிந்து*
   *திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே’ – புலம். 109 – 3 - 8*
4. *தொல். பொருள். இளம்பூரணம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969, பக்.18 உரை.*
5. *தமிழ் லெக்சிகன், தொகுதி 5, பகுதி 1 பக். 2814*
   *கானவன் சூடுறு வியன் புனம் அகம். 368 – 1*
6. *இதையேல் புனவன் புகைநிழல் கடுக்கும் – அகம், 140 – 11*
   *மது, 79, 376, பரி, 10 – 43 அகம், 393 – 4, 394 – 3,*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

7. முதைபுனம் கொன்ற ஆர்கலி உழவர் – குறுந். 165 – 1 நற். 121 – 1, 889 – 9 ; குறு. 204 - , அகம். 5 – 8, 88 – 1, 94 – 10, 262 – 1, 359 – 14.
8. புனவன் துடவை பொன்போல் சிறுதினை குறுந். 105 – 1, பெரும். 201 ; மலை. 122 ; குறுந். 133 – 1, 392 – 4.
9. அரக்கத் தன்ன நுண்மணல் கோடு கொண்டு – பதிற். 300 – 27
10. ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால் – அகம். 194 – 4
11. சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
    கருங்கால் வரகின் இருங்குரல் புலர – மதுரைக். 194 -2
12. உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரித்து
    புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ
    நான்மோர் மாறும் நல்மா மேனி
    அனைவிலை உணவின் கிளையுடன் அருத்தி
    நெய்விலைக் கட்டிப் பசும் பொன் கொள்ளான்
    எருமை நல்லான் கருநாகு பெறுஉம் – பெரும். 158 – 65
13. 'முல்லை சான்ற முல்லையம் புறவு' சிறு. 169
    புறவு உரை – பதிற். 13 – 20
    புன்புலம் தழீஇய புறவணி வைப்பு – பதிற். 30 - 25
14. கொல்லை இரும்புனம் நெடிய என்னாது – அகம், 89 – 17
15. "புதுப்பூங் கொன்றைக் கானம் காரென" குறுந். 21-3-4
16. விளைவு அறாஅ வியன்கழனி
    … …. …. …. …. ….
    கோள்தெங்கின் குலைவாழைக்
    காய்க்கமுகின் கமழ்மஞ்சள்
    இனமாவின் இணர்ப்பெண்ணை
    முதற்சேம்பின் முளைஇஞ்சி பட், 8, 16 – 19
17. தொல்-பொருள் – 20 இளம்பூரணர் உரை
18. தமிழ் லெக்சிகன் தொகுதி 2, பகுதி 1, பக். 799
    கழனி உழவர் தண்ணுமை இசைப்பின்
    பழன மஞ்ஞை மழைசெத்து ஆலும் பதிற். 90-41-42
19. தமிழ் லெக்சிகன் தொகுதி 4, பகுதி 1, பக். 2547
    பழன மங்கை உதிர்த்த பீலி
    கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும் புறம். 13-11-12
20. புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல் புறம். 15-4
21. நீர்ச்செறுவில் நெய்தல் பூப்ப பட். 11-12
22. … … … மயங்கு பிசிர்
    மல்கு திரையுழந்த ஓங்கு நிலைப்புன்னை
    வண்டிமிர் இணர துண்தாது வரிப்ப
    மணம்கமழ் இனமணல் எக்கர் அகம். 250- 1-4
23. பெயினே, விடுமான் உழையினம் வெறுப்பத் தோன்றி
    இருங்கதிர் நெல்லின் யாண ரஃதே
    வறப்பின், மாநீர் முண்டகம் தாஅய்ச்சேறு புலர்ந்து
    இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும் நற். 311-1-4
24. தொல். பொருள்-20, இளம்பூரணர் உரை
25. புணரி பொருத பூமணல் அடைகரை நற். 11-6

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

*26. எக்கர் நண்ணிய எம்மூர் வியந்துறை குறுந். 53-5*

*27. வயிறுடைப் போது வாலிதின் விரீஇய*
*புலவுப் பொருதழித்த பூதாறு பரப்பின் அகம். 130-7-8, குறுந். 114-2*

*28. இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு மதுரைக். 117*

*29. மணியேர் நெய்தல் மாமலர் நிறைய*
*பொன்னேர் நுண்தாது புன்னை தூஉம்*
*வீழ்தாழ் தாழைப் பூக்கமழ் கானல் நற். 68, 2-4*

*30. வன்புலக் கேளிர்க்கு வருவிருந்து அயரும்*
*மென்புல வைப்பின் நன்நாட்டுப் பொருந புறம். 42-17-18*

*31. மென்புல வைப்பினித் தண்பணை யூரே புறம். 341 -19*

*32. புன்புல மயக்கத்து விளைந்தன தினையே ஐங். 260-4*

*33. வித்தி வான் நோக்கும் புன்புலம் புறம். 18-24*

*34. அன்னாய் வாழி, வேண்டு அன்னை, நம்படப்பை ஐங். 203-1*

*35. களிறுநீ றாடிய விடுநில மருங்கின் புறம். 325-1*

*36. விடுநிலக் கரம்பை விடரளை நிறைய பதிற். 28-7*

*37. பளிங்கு விரைஇய செம்பரல் முரம்பு பதிற் 66 – 18*

*38. இருநிலக் கரம்பை படுநீ றாடி பெரும். 93*

*39. கிருட்டிணமூர்த்தி. டாக்டர் கே. கே., களர் நிலச் சீர்திருத்தம் வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர், 1974, பக். 27*

*40. சுடுமண் தசும்பின் மத்தம் தின்ற பிறவா வெண்ணெய் உருப்பு இடந்தன்ன உவரெழு களரி ஓமையம் காட்டு நற். 84, 6-8*

*41. அதனெறிந் தன்னநெடுவெண் களர் புறம், 193 – 1*

*42. களரி ஓங்கிய கவைமுடக் கள்ளி நற், 384 – 2*

*43. கருங்கனி ஈந்தின் வெண்புறக் களரி 125-2*

*44. களரிப் புளி நற். 374-3*

-------------------------------------------